KALANJIYAM – International Journal of Tamil Studies
An international, peer-reviewed academic journal
e-ISSN: 2456-5148
Vol. 6, No. 01 (2026) 6

களஞ்சியம்
Peer-reviewed · Open access · Google Scholar
Crossref DOI · SJIF Imapact Factor 3.5 · Quarterly
Online@: ngmtamil.in
DOI: 10.63300/tirjts06012026.40

UGC Approved by Transparent Peer Review

ARTICLES

சங்க இலக்கிய அழகியல் கூறுகளுள் உள்ளுறையும் இறைச்சியும்

ULLURAI AND IRAICHI AMONG THE AESTHETIC ELEMENTS OF SANGAM LITERATURE

Dr. C. Porkai Athirai[1,*]

[1] Associate Professor, Department of Tamil (SF), PSG College of Arts and Science, Coimbatore – 641 014.
***Corresponding author:** Dr. C. Porkai Athirai, porkaiathirai2024@gmail.com

ARTICLE INFO

Article history
Received: 11 April 2026
Revised: 15 April 2026
Accepted: 20 April 2026

Article ID
KIJTS-2026-0026

Peer review
Double-blind peer review

Keywords
Tholkappiyam Aesthetics
Sangam Literature Aesthetics
Ulluthurai
Iraichi

ABSTRACT

In the field of literary criticism, aesthetics encompasses a broad scope covering literature and other arts. Among them, aesthetic insights concerning literature are found in the Porulathikaram of the Tholkappiyam. All nine chapters of the Porulathikaram elucidate the aesthetic elements employed in literature. Sangam literature follows the tradition of the Tholkappiyam. In these works, rather than expressing a concept directly, aesthetic components that serve to convey meanings implicitly—as hidden meanings—are known as Ulluthurai (implied meaning) and Iraichi (suggestive meaning). Both Ulluthurai and Iraichi serve as the subtle nuances of Akapporul (interior/love poetry). In Sangam poetry, they are aesthetic devices used to indirectly convey the power of love without explicitly stating the actions of the characters. The purpose of this essay is to establish that Ulluthurai and Iraichi are essential for understanding the expression of love in Sangam literature.

How to cite this article: Dr. C. Porkai Athirai (2026). சங்க இலக்கிய அழகியல் கூறுகளுள் உள்ளுறையும் இறைச்சியும். *KALANJIYAM – International Journal of Tamil Studies*, *6*(01), 424–434. https://doi.org/10.63300/tirjts06012026.40
Copyright and licence: © 2026 The Author(s). This is an open access article distributed under the terms of the Creative Commons Attribution 4.0 International License (CC BY 4.0), which permits unrestricted use, distribution and reproduction in any medium, provided the original work is properly cited.

முனைவர் சி.பொற்கை ஆதிரை, இணைப்பேராசிரியர்,
தமிழ்த்துறை(சுயநிதிப்பிரிவு), பூசாகோ கலை அறிவியல் கல்லூரி, கோயம்புத்தூர் - 641014. மின்னஞ்சல் : porkaiathirai2024@gmail.com

ஆய்வுச் சுருக்கம் :

திறனாய்வுத் துறையில் அழகியல் என்பது இலக்கியம் மற்றும் ஏனைய கலைகளைக் கொண்ட பரந்துபட்ட களங்களை உடையது. அவற்றுள் இலக்கியத்திற்கான அழகியல் செய்திகள் தொல்காப்பியப் பொருளதிகாரத்தில் கிடைக்கப்பெறுகின்றன. பொருளதிகாரத்தில் காணப்படும் ஒன்பது இயல்களும் இலக்கியத்தில் பயின்றுவரும் அழகியல் செய்திகளை எடுத்துரைக்கின்றன. தொல்காப்பிய வழி வந்தவையே சங்க

இலக்கியங்கள். இவ்விலக்கியங்களில் ஒரு கருத்தை நேரடியாகக் கூறாமல் குறிப்புப் பொருளாக – மறை பொருளாகக் கூற துணைநிற்கும் அழகியல் கூறுகளே உள்ளுறை இறைச்சியாகும். இந்த உள்ளுறையும் இறைச்சியும் அகப்பொருளின் நுட்பங்களாக அமைகின்றன. சங்க இலக்கியப் பாடல்களில் கதை மாந்தர்களின் செயல்களை வெளிப்படையாக உணர்த்தாது மறைமுகமாக அன்பின் வலிமையை உணர்த்த பயன்படும் அழகியல் உத்தியாகும். சங்க இலக்கிய அன்பின் புலப்பாட்டினை அறிய உள்ளுறையும் இறைச்சியும் இன்றியமையததாக அமைகின்றன என்பதை நிறுவுவதே இக்கட்டுரையின் நோக்கம்.

திறவுச் சொற்கள் :

தொல்காப்பிய அழகியல், சங்க இலக்கிய அழகியல்,உள்ளுறை, இறைச்சி

முன்னுரை :

தமிழில் மிகப் பழமையான இலக்கியங்கள் என்று கருதப்படுவன சங்க இலக்கியங்களாகும். அவை எட்டுத்தொகை, பத்துப்பாட்டு என்பன. பொருளடிப்படையில், சங்க இலக்கியப் பாடல்கள் பொதுவாக அகத்திணைப்பாடல்கள், புறத்திணைப்பாடல்கள் என இருவகையாகப் பகுக்கப் பெறினும், அவற்றை விரித்துக் கூறும் போக்கில் இவையிரண்டு மட்டுமின்றிப் பல்வகை வாழ்வியற் கூறுகளை அழகியல் உணர்வோடு இப்பாடல்கள் வெளிப்படுத்துகின்றன. சங்க இலக்கியப் பாடல்கள் ஆசிரியப்பா, வஞ்சிப்பா, கலிப்பா, பரிபா, என்னும் நால்வகை யாப்பினாலும் இயற்றப்பெற்றவை. எனினும் இயல்பான ஓசைப்பாடும், கருத்தினைச் சிக்கலில்லாது கூற ஏற்ற முறையில் உள்ளதுமான ஆசிரியப்பாவே சங்க இலக்கியப் பாடல்களில் அதிகமாக இடம்பெற்றுள்ளன.

இயற்கையும் சங்க இலக்கியமும்

சங்க இலக்கியங்களின் சிறப்பினை, “நெறியாகவும் அளவாகவும் உரமாகவும் நாணமாகவும் கற்பாகவும் காமக் கூறுகளைச் செவ்வனம் காட்டும் ஓர் உலக இலக்கியம் தமிழில் தான் உண்டு”1 என்று வ.சுப. மாணிக்கனார் கூறுகிறார். இலக்கியத்தின் தோற்றத்தினைப் பற்றி ஆராய்ந்த அறிஞர்பெருமக்கள் “இலக்கியத்தின் தோற்றம் இயற்கை வழிப்பட்டது என்பர்”2 என்கின்றனர். அவ்வாறே பழந்தமிழர் இயற்கையோடு இயைந்து வாழ்ந்த காலம் சங்கஇலக்கியக் காலம் என்பதையும் அறிஞர்கள் நிறுவியுள்ளனர். சங்கத் தமிழரின் வாழ்க்கை, தமிழக இயற்கைச் சூழ்நிலைக்கு ஏற்பவே இருந்தன என்பதற்கு தொல்காப்பியப் பொருளதிகாரம் சான்றாகும். ஆ. வேலுப்பிள்ளை, சங்க காலத்தினை “இயற்கை நெறிக்காலம்”3 என்று அழைக்கின்றார்.

“தமிழன் மரபே இயற்கை. பழந்தமிழன் இயற்கையின் வயிற்றிலே தன்னை ஒப்படைத்து வாழ்வை நடத்தியவன். அவனுடைய வாழ்வே இயற்கையின் திருவுரு எனலாம். புறவாழ்வை மட்டுமன்றி அகவாழ்வையும் இயற்கையே உருவாக்கிற்று”4

என்னும் கதிர். மகாதேவனின் கருத்தும் இயற்கை மனித வாழ்வோடியைந்து காணப்பெற்றது என்பதை வலியுறுத்துகிறது.

அகம், புறம் எனப் பிரிக்கப்பெற்ற சங்க இலக்கியங்களுள் அகப்பாடல்களில் இயற்கைப்புனைவு மிகுதியாகக் காணப்படுகிறது. புறப்பாடல்களிலும் இயற்கை வருணனை வந்துள்ளது. பழந்தமிழ்ப் புறப்பாடல்களில் நில வருணனைகள் இயற்கை வருணனைகளாக அமைந்துள்ளன. நக்கீரர்,

"கைப்புனைந்தியற்றாக் கவின்பெறு வனப்பு" - திருமுருகா.17

என இயற்கையைச் சிறப்பிக்கிறார். "இயற்கையின் ஒவ்வொரு பகுதியையும் பகுத்துப் பாடியவர்கள் பண்டைத் தமிழ்ப் பாவலர்கள். காதல், வீரம் என்பனவற்றைத் தலைமைக் கூறுகளாகக் கொண்டு பிற பல கூறுகளையும் துணையாகப் பெற்றுள்ளது மனித வாழ்க்கை. அத்தகைய மனித வாழ்க்கையின் பல்வேறு கூறுகளையும் வருணித்துத் தெளிவுபடுத்துவதற்காகவே பண்டைத் தமிழ்ச் சான்றோர் இயற்கையைப் பயன்படுத்தினர். சுருங்கச் சொன்னால் மனித இதயத்தின் உணர்வுகளையும், இயற்கையின் கவர்ச்சி நிறைந்த எழிலையும் நெருங்கிய பிணைப்புடையனவாய் இனிய உறவுடையனவாய் இணைத்தனர்"5 எனும் மு. வரதராசன் கருத்து சங்க இலக்கியத்தில் இயற்கையின் இடத்தை விரிவாகப் புலப்படுத்துகிறது.

"தமிழ்ப் புலவரோ தம் புலமைத் திறனைக் காட்டுதற்கு முதற்பொருளாக மக்களையும் துணைப்பொருளாக இயற்கையையும் எடுத்துக் கொண்டனர். இயற்கையைத் தமிழ்ப் புலவர் கையாண்ட முறையில், வேறு எம்மொழிப் புலவரும் கையாண்டிலர். தமிழரின் இயற்கை ஈடுபாட்டைப் பற்றி ஆராயுந்தோறும் எந்நாளும் புதிய கருத்துகளும் வியத்தற்குரிய உண்மைகளும் கண்டு வருகிறேன்";6 எனும் தனிநாயக அடிகளாரின் கருத்தும் சங்க இலக்கியத்தில் இயற்கையின் இன்றியமையாமையை உறுதிசெய்கிறது. சங்க இலக்கியத்தில் இயற்கைப் புனைவுகள் மிகுதியாக இருப்பினும், இவை தனி இயற்கைப் பாடல்களாக இல்லை. இவற்றில் இயற்கை, திணையமைப்புக்காகவும் மனித வாழ்க்கையின் பின்புலத்திற்காகவும் பாடப்பெற்றுள்ளது.

"இயற்கையை இயற்கைக்காகவே பாடும் நிலை - அதனைத் தனிப்பொருளாகக் கொண்டு கருத்துரைக்கும் துறை சங்க காலத்தில் இருந்ததில்லை. மக்களின் ஒழுகலாற்றிற்கும் சிறப்பாகக் காதலொழுக்கத்திற்கும் பக்கப்பொருளாகப் பாடும் சார்புநிலையே இயற்கைக்கு அன்றைய இலக்கியத்தில் இடமாய் இருந்தது"7 என்னும் வ.சுப. மாணிக்கம் அவர்களின் கருத்து இதைத் தெளிவுபடுத்துகிறது.

இங்குக் கூறியவற்றால் இயற்கையழகில் தோய்ந்திருந்த சங்ககால மக்களின் படைப்பாகிய சங்க இலக்கியம் அழகியல் கூறுகள் பலவற்றை தன்னுள் கொண்டுள்ளது என்பதை உணர முடிகிறது.

தொல்காப்பிய அழகியல் கூறுகளும் சங்க இலக்கிய அழகியல் கூறுகளும்

தொல்காப்பியம் செய்யுளிற்கு அழகூட்டுவனவாக வரையறை செய்தவை சங்க இலக்கியங்களில் அழகியல் கூறுகளாக வெளிப்படுகின்றன. அவற்றுள் உள்ளுறை, இறைச்சி, மெய்ப்பாடு, உவமை, முப்பத்தினான்கு செய்யுள் உறுப்புக்கள், வருணனை போன்றன குறிப்பிடத்தக்கன.

தொல்காப்பியத்தில் உள்ளுறை

தொல்காப்பியம் உணர்த்தும் பொருள் சார்ந்த அழகியல் சிந்தனைகளில் உள்ளுறை குறிப்பிடத்தக்க ஒன்றாகும். இது உவமைப் பொருள் நயத்தினைக் கூறுகிறது. தொல்காப்பியம் விளக்கும் இவ்வுவமை நயமானது, இலக்கியத்திற்கே உரியதாகப் போற்றப்படுகின்றது. சங்க இலக்கியத்தில் அகப்பொருள் பாடல்களிலேயே உள்ளுறை பெரிதும் இடம்பெறுகின்றது.

உள்ளுறை உவமையின் இலக்கணம்

உள்ளுறை என்பது கருப்பொருளின் துணை கொண்டு பெறப்படும் குறிப்பு உவமையாகும். இது அகப்பொருளைச் சார்ந்தது என்ற அடிப்படையில் தொல்காப்பியத்தில் அகத்திணையியலிலும் பொருளியலிலும் விளக்கப்படுகிறது. உவமை என்ற அடிப்படையில் இதன் இயல்பு உவமையியலில் ஆராயப்படுகிறது. உள்ளுறை உவமையின் இலக்கணமாக,

“உள்ளுறுத்து இதனோடு ஒத்துப்பொருள் முடிகென

உள்ளுறுத்து உரைப்பதே உள்ளுறை உவமம்”

- தொல்.பொருள்.அகத்.நூ.51

என்கிறது தொல்காப்பியம். கருப்பொருளோடு ஒத்துப் பொருள்கொள்ளும் வகையில் இலக்கியத்தில் உள்ளுறைச் செய்திகள் காணப்படுகின்றன.

“உள்ளுறை உவமம் ஏனை உவமம் எனத்

தள்ளாதாகும் திணையுணர் வகையே”

- தொல்.பொருள்.அகத்.நூ.49

எனும் நூற்பா திணையை உணர்வதற்கு உள்ளுறை உவமம் பெரிதும் துணை செய்வதைக் கூறுகிறது.

உள்ளுறை உவமைவரும் அகப்பாடல்களில் கருப்பொருள்கள் இடம்பெறும். அக்கருப்பொருட்களில் ‘தெய்வம்’ நீங்கலாக உணவு, மா, மரம், புள், பறை, தொழில், பண், பூ, நீர் முதலிய பொருட்களை ஒட்டியே உள்ளுறை பிறக்கும் என்பதைத் தொல்காப்பியம்,

“உள்ளுறை தெய்வம் ஒழிந்ததை நிலனெனக்

கொள்ளு மென்ப குறியறிந் தோரே”

- தொல்.பொருள்.அகத்.நூ.50

என்று வரையறுக்கிறது. உள்ளுறை தவிர பொதுவான உவமம் என்பதும் ஒன்று உண்டு. உள்ளுறை உவமத்தில் வெளிப்படையாகத் தோன்றும் கருத்துக்கள், உள்ளே உறையும் கருத்துக்களுக்கு உவமையாக வரும்படி அமைக்கப்படுகின்றன. ஏனை உவமத்தில் உவமேயமும் இருக்கும். எனவே அது வெளிப்படையாக உணரப்படும். இதனைத் தொல்காப்பியம்,

“ஏனை உவமம் தானுணர் வகைத்தே”

- தொல்.பொருள்.அகத்.நூ.52

என்று கூறுகிறது.

உள்ளுறையின் வகை

உள்ளுறை ஐந்து வகைப்படும். அவை உடனுறை, உவமம், சுட்டு, நகை, சிறப்பு என்பதாகத் தொல்காப்பியர் வரையறுக்கிறார்.

“உடனுறை உவமம் சுட்டுநகை சிறப்பெனக்

கெடலரு மரபின் உள்ளுறை ஐந்தே”

- தொல்.பொருள்.பொருளி.நூ.46

“உடனுறையாவது, ‘உடனுறைவது ஒன்றைச் சொல்ல, அதனாலே பிறிதொரு பொருள் விளங்குவது; உவமம் என்பது ‘உவமையைச் சொல்ல உவமிக்கப்படும் பொருள் தோன்றுவது’ சுட்டு என்பது ஒரு பொருளைச் சுட்டிப் பிறிதொரு பொருளுணர நிற்றல்; சிறப்பு என்பது இதற்குச் சிறந்தது இஃது எனக் கூறுவதனானே பிறிதோர் பொருள் கொளக் கிடப்பது”8 என்று இளம்பூரணர் இதற்கு உரை விளக்கம் தந்துள்ளார்.

முடிவிலா இன்பம் தரும் உள்ளுறை

உள்ளுறையானது குறிப்பாகப் பொருளைத் தெளிவுபடுத்துகிறது. அதனோடு, முடிவில்லாத சிறப்புடைய இன்பந்தருமாறு வருவதாகவும் உள்ளது. இது உள்ளுறையின் பண்பாகும். இதனை,

“அந்தமில் சிறப்பின் ஆகிய இன்பம்

தன்வயின் வருதலும் வகுத்த பண்பே”

- தொல்.பொருள்.பொருளி.நூ.49

என்கிறது தொல்காப்பியம். மேலும்,

“மங்கல மொழியும் அவையல் மொழியும்

மாறில் ஆண்மையின் சொல்லிய மொழியும்

கூறிய மருங்கிற் கொள்ளும் என்ப”

- தொல்.பொருள்.பொருளி.நூ.50

எனும் நூற்பா, தலைவனுக்குத் தீங்கு வரும் என்று அஞ்சி அவனை மங்கல மொழியால் வாழ்த்துதலும், தன்னை வஞ்சிக்குமிடத்தில் திட்டுதலும், தலைவனின் மாறுஇல்லாத ஆளுந்தன்மையில் பழிபடச் சொல்லுதலும் என மூன்றும் உள்ளுறையின் கூறாக அடங்கும் என மொழிகிறது.

உள்ளுறையுள் உள்ளுறை உவமையானது ஓர் உட்பிரிவு என்பதால் 'உவமையியலிலும்' தொல்காப்பியர் உள்ளுறை உவமம் பற்றிக் குறிப்பிடுகிறார்.

"பிறிதொரு படாது பிறப்பொடு நோக்கி

முன்ன மரபின் கூறுங்காலைத்

துணிவொடு வரூஉம் துணிவினோர் கொளினே"

- தொல்.பொருள்.உவமை.நூ.23

என்பதில், 'உவமையொடு உவமிக்கப்படும் பொருள் பிறிதொன்று தராது, உவம நிலங்களொடும் பிறவிகளொடும் சேர்த்து நோக்கி, முற்கூறிய இயல்பில் கூறும்போது, தெளிவுடையோர் உணர்ந்து துணிவொரு கொள்ளுமாறு விளக்குகிறது' என்று உள்ளுறை உவமைக்கு மேலும் விளக்கம் பெறப்படுகிறது. தொடர்ந்து,

"தவலரும் சிறப்பின் அத்தன்மை நாடின்

வினையினும் பயத்தினும் உறுப்பினும் உருவினும்

பிறப்பினும் வரூஉம் திறத்தியல் என்ப"

- தொல்.பொருள்.உவமை.நூ.25

எனும் நூற்பா, ஏனை உவமை வினை, பயன், மெய், உரு என்ற நான்கின் அடிப்படையில் தோன்றுகிறது எனச் சொல்கிறது. உள்ளுறை உவமை வினை, பயன், மெய், உரு, பிறப்பு என ஐந்தின் அடிப்படையில் தோன்றுகிறது. இவற்றை 'உள்ளுறை'9 எனும் தலைப்பின்கீழ் மிக எளிமையாக விளங்குமாறு அதன் தன்மைகளை நிரல்படுத்தி தெளிவுப்படுத்துகிறார் தமிழண்ணல். உவமையியலில் இந்த உள்ளுறை உவம விளக்கங்களுடன் இதனை யார்யாரெல்லாம் எந்தெந்த அளவு எந்தெந்தப் பொருளைக் கூறுதற்குரியவர்கள் என்றும் விளக்கப்படுகிறது. பொதுவாக உள்ளுறை என்பது இலக்கியத்தில் அழகியல் கூறாக - உத்தியாகப் பயன்படுகிறது. கூடவே, மனிதனை நல்வழிப்படுத்தும் நோக்காகவும் அமைகிறது. இதனை,

"உள்ளுறை உவமைக்காகக் காட்டப்படும் அகப்புறப்பாடல்களை ஆழ்ந்து நோக்கினால், பிறரை நாகரிகமாகத் திட்டுவதற்கும், அறிவுரை புகட்டுவதற்கும் ஒரு கருவியாக இவ்வுள்ளுறை உவமையைப் பண்டைத்தமிழ்ப் பேரறிஞர்கள் கொண்டார்கள்"10 என ச. சாம்பசிவனார் கூறுவது நினைத்தற்குரியது.

சங்க இலக்கியத்தில் உள்ளுறை

சங்ககால இலக்கியங்களுக்கே உரிய தனிச்சிறப்பு உள்ளுறை உவமையாகும். உள்ளுறை என்பது பெரும்பாலும், அக இலக்கியங்களில் ஓர் உத்தியாகக்

கையாளப்படுகிறது. அக வாழ்வில் நேரிடும் இன்பதுன்பங்களைப் பற்றியே உள்ளுறைகள் பெரிதும் பேசுகின்றன எனலாம். தலைவனின் ஒழுக்கத்தை விமர்சித்து அறிவுறுத்துவதாக இவை உள்ளன. விரைவாக வரைவு மேற்கொள்ளவும், பரத்தையிடம் செல்லும் தலைவனைக் கடிந்துரைக்கவும் உள்ளுறை துணைசெய்கிறது. இவற்றில் தலைவன் முதலியோர் கூற்று நிகழ்த்துவதற்கும், இன்னின்னவர்கள் தான் உள்ளுறை கூற உரியவர்கள் என்பதற்கும், அவ்வாறு கூறும்போது யார்யார் எவ்வெவ்பொருள்களை அமைத்துக் கூறவேண்டும் என்பதற்கும் உரிய முறைகளைத் தொல்காப்பியர் வகுத்துள்ளார். "அகப்பாடல்களில் மாந்தரின் உணர்வுகளை மறைமுகமாகப் புலப்படுத்தப் புலவர்கள் கருப்பொருள்களைக் கொண்டு உள்ளுறை உவமைகளை அமைத்தனர்"11 என்பர் அறிஞர்.

ந. சுப்புரெட்டியார், "உவமைதான் எல்லா அணிகளிலும் எளிமையானது. ஏனைய அணிகட்குத் தாய் போன்றது. இத்தகைய உவமையினின்றும் தொன்றிய உள்ளுறை உவமம் பட்டைத்தீட்டப்பெற்ற வயிரம் போன்றது. கவிஞனின் கூர்த்த மதியினை ஒளிவிட்டுக் காட்டி நிற்கும் பான்மையது"12 என்று அழகுடன் உணர்த்துகிறார்.

தமிழண்ணல், இதனை 'உள்ளுறைக் கோட்பாடு' என்று கூறி, "இது பொருளைத் தெளிவுபடுத்துவதற்கு மட்டுமல்லாமல், முடிவுற்ற இன்பத்தினைத் தருவதற்காகவும் இலக்கியத்தில் இடம் பெறுகிறது"13 என்றும் கூறுகிறார்.

கதிர் மகாதேவன், "படிமங்கள் உள்ளுறையால் உறையும் நலம் பெற்றவை. திணை உணர்வகையால் விளங்கும் கருப்பொருள்கள், புலவர் நாவில் உருக்கொண்டு, வடிவம் எடுத்துப் படிமம் சுட்டிக் குறிப்புப்பொருளாய் (Suggestion) விளங்குகிறது"14 என்கிறார்.

இவ்வறிஞர்களின் கருத்துக்களின்படி உள்ளுறை, அழகியல் கூறாக அமைந்ததோடு மட்டுமல்லாமல் பிறரை நாகரிகமாகக் கடிவதற்கும், அறிவுரை புகட்டுவதற்கும் ஒரு கருவியாக இவ்வுள்ளுறை உவமையைப் பண்டைத் தமிழர் பயன்படுத்தினர் என்பதை அறியலாம். இதற்குச்சான்றாக பின்வரும் பாடலைக் காட்டலாம்:

"கோழிலை வாழைக் கோண்மிகு பெருங்குலை

ஊழுறு தீங்கனி உண்ணுநர்த் தடுத்த

சாரற் பலவின் களையொ டூழ்படு

பாறை நெடுஞ்சுனை விளைந்த தேறல்

அறியா துண்ட கடுவன் அயலது

கறிவளர் சாந்தம் ஏறல் செல் லாது,

நறுவீ அடுக்கத்து மகிழ்ந்துகண் படுக்கும்

குறியா இன்பம் எளிதின் நின்மலைப்

பல்வேறு விலங்கும் எய்தும் நாட!...."

- அகம். 2

குறிஞ்சித் திணையில் அமைந்த இந்தப் பாடல் பகற்குறியின் செறிப்பு அறிவுறுத்தி தோழி வரைவு கடாயது எனும் துறைப்பொருளில் அமைந்துள்ளது. 'செழுமையான இலைகள் கொண்ட வாழையின் பெரிய குலைகளில் இனிய கனிகளாலும், தம்மை உண்போர் பிற கனிகளை உண்ணாது தடுக்கும் சுவையுடைய மலைச்சாரலில் உள்ள பலாவின் சுளைகளாலும், மலையிலுள்ள சுனையில் தேன் உண்டானது. அதனை ஆண் குரங்கு தேன் என அறியாது உண்டது. அதன் மயக்கத்தால் அருகிருந்த மிளகுக்கொடி படர்ந்த சந்தன மரத்தில் ஏறமாட்டாது, அதன் நிழலில் மணம் வீசும் மலர்ப்படுக்கையில் படுத்து உறங்கியது. இத்தகைய எதிர்பாராத இன்பத்தினை உன் மலையில் வாழும் ஏனைய பல்வேறு விலங்குகளும் எளிதாகப் பெறும் மலைநாடனே!' எனத் தோழி உரைக்கின்றாள்.

இதில் உள்ளுறையாக, ஆண் குரங்கு தேனை அறியாது உண்டு தன் தொழிலாகிய மரம் ஏறுதல் செய்யாது வேறெங்கும் செல்லவும் முடியாது அருகிருந்த சந்தன மரத்தின் நிழலில் மலர்ப்பரப்பில் உறங்குவதுபோல, தலைவனும் களவொழுக்கத்திலேயே இன்பமடைந்து அறம் செய்யும் தொழிலை விடுத்து, தலைவியை மணக்கவுமில்லாது களவொழுக்கமாகிய இன்பத்தில் ஊறித் திளைத்து மயங்கிக் கிடக்கிறான் என்பதாகக் குறிப்புப் பொருள் உள்ளது.

சிறைப்புறமாகத் தோழி செறிப்பறிவுறுத்தியதாக வரும் குறிஞ்சித் திணைப்பாடல், ஒன்றில் 'தினைப்புனத்திலே மேயும் பன்றியைக் கொல்ல சிறுபொறிபோல் அமைத்து வைத்த பெரிய கற்பலகையின்கீழே நல்ல ஒளியுடையதும் வலிமையுடையதும் ஆன புலி புகுந்து இறந்தது' என்கிறாள் தோழி.

இப்பாடலில் பன்றிக்கென வைத்த பொறியில் புலி அகப்படும் என்றது, தலைவன் மணம்புரிய தாமதிப்பதால் இவனினும் சிறந்த ஒருவன் தலைவியை மணம்புரிய வேண்டி வந்தான் என்பதைத் தோழி குறிப்பினால் உணர்த்துகிறாள். அப்பாடற் பகுதி வருமாறு:

"தினையுண் கேழல் இரியப் புனவன்

சிறுபொறி மாட்டிய பெருங்கல் படாஅர்

ஒண்கேழ் வயப்புலி படுஉம் நாடன்

ஆர்தர வந்தனன் ஆயினும் படப்பை

இன்புசுப் பெருங்கலை நன்மேயல் ஆரும் ....."

- நற். 119

இவ்வாறு உள்ளுறை எனும் அழகுக்கூறு அகப்பாடல்களில் ஆங்காங்கே இடம்பெற்று இலக்கிய அழகியலுக்கு பெருந்துணைபுரிகின்றது.

தொல்காப்பியத்தில் இறைச்சி

இறைச்சி என்பது உள்ளுறையைப்போல அகப்பொருள் இலக்கியங்களில் அமையும் இலக்கிய அழகுகளுள் ஒன்றாகும். இறைச்சி பற்றிப் பொருளியலில் மூன்று நூற்பாக்கள் உள்ளன. பாடலின் உட்பொருளை உள்ளுறை உவமத்தை விட நுட்பமாகக் கூறப்பெறுவது இறைச்சி; உடனுறை என்பதனையே இறைச்சி என்று நச்சினார்க்கினியர் உரைக்கிறார். "வே. வெங்கடராஜுலு ரெட்டியார் இக்கருத்தை ஒட்டியே 'இறு', 'தங்கு' என்பதன் அடியிற்பிறந்த பெயர் இறைச்சி என்று 'இறைச்சிப்பொருள்' எனும் கட்டுரையில் விளக்கம் தருவதாக"15 ந. சுப்புரெட்டியார் கூறியுள்ளார்.

தமிழண்ணல் "இறைச்சி என்பது கருப்பொருட்களின் ஒரு பகுதியாகிய மான், ஆடு, மாடு முதலிய விலங்குகளையும் பறவைகளையும் (அதாவது உயிரினங்களைப்) பெரும்பகுதி குறிக்கும்"16 என்கிறார்.

'இறைச்சி' என்பது கருப்பொருட்களையும் அதனிலும் குறிப்பாக அக்கருப்பொருள் சார்ந்த உயிரினங்களின் அன்பினை வெளிப்படுத்துவதாகும். இவ்வுயிரினங்களின் அன்பினை உயர்திணையின உரிப்பொருளில் ஏற்றிக் கூறினாலும் அவை உரிப்பொருளுக்குப் புறத்தே உரியனவேயாகும். இவ்வாறு உரிப்புறமாக இவ்வுயிரினங்களின் அன்புச்செயல்களைக் குறிக்குமிடங்களும் உண்டு; பிறபொருளைக் குறிக்குமிடங்களும் உண்டு; இதனைத் தெளிவுடன் உணர்ந்து கொள்ளவேண்டும். 'இறைச்சி' எனும் அழகியல் உத்தி அக இலக்கியங்களில் தலைவியை வற்புறுத்தி ஆற்றுவிக்கும் இடங்களில் அதிகம் பயன்படுத்தப்பட்டுள்ளதைக் காணலாம்.

சங்க இலக்கியத்தில் இறைச்சி

உள்ளுறை உவமையினும் நுட்பம் வாய்ந்தது இறைச்சியாகும். இறைச்சி என்பது உள்ளுறை வகையாக உள்ள 'உடனுறை' என்பர் அறிஞர். "இறைச்சி என்பது உரிப்பொருளுக்குப் புறத்தது" (இளம்.தொல்.பொருள்.பொருளி.நூ.33) என்பதால் கருப்பொருள்களான பறவைகள், விலங்குகள் போன்ற உயிரினங்களின் செயல்கள் பற்றியதாக இடம்பெறுகிறது.

"நிலத்தினும் பெரிதே வானினும் உயர்ந்தன்று

நீரினும் ஆரளவின்றே – சாரல்

கருங்கோற் குறிஞ்சிப் பூக் கொண்டு

பெருந்தேன் இழைக்கும் நாடனொடு நட்பே"

- குறுந். 3

எனவரும் குறுந்தொகைப்பாடலில், தலைவன், சிறைபுறத்திலிருக்க, விரைவில் வரைந்துகொள்ள வேண்டி தோழி, இயற்பழித்துக் கூற, தலைவி இயற்பட மொழிவதாகச் சூழல் அமைகிறது. கிளைகளில் பூத்துக் குலுங்கும் குறிஞ்சிப் பூக்களைக் கொண்ட, மலைப்பகுதிகளில் பெரிய தேனடைகளை வண்டுகள்

தொகுக்குமாறுடைய நாட்டையுடைய தலைவனொடு கொண்ட நட்பு நிலத்தினும், வானினும் பெரியதாகவும் உயர்ந்ததாகவும் கடலினும் ஆழமானதாகவும் உடையது என்கிறாள். குறிஞ்சிப் பூக்களைக் கொண்டு பெருந்தேன் இழைத்தாற்போல வழிமுறையால் பெருகும் நட்பு என்ற பொருளிற்கு வண்டின் செயல் இறைச்சியாகக் கூறப்படுகிறது.

கலித்தொகையின், பாலைக்கலியில் இடம்பெற்றுள்ள 'அரிதாய அறன் எய்தி அருளியோர்க்கு அளித்தலும்…' எனத் தொடங்கும் தோழிகூற்று பாடலில்,

"அடிதாங்கும் அளவு இன்றி, அழல் அன்ன வெம்மையால்

கடியவே – கனங்குழாஅய்! – காடு என்றார் அக்காட்டுள்

துடிஅடிக் கயந்தலை கலக்கிய சின்னீரைப்

பிடி ஊட்டி பின் உண்ணும் களிறு எனவும் உரைத்தனரே

இன்பத்தின் இகந்து ஒரீஇ, இலை தீந்த உலவையால்

துன்புறூஉம் தகையவே காடு என்றார் அக்காட்டுள்

அன்பு கொள் மடப்பெடை அசைஇய வருத்தத்தை

மென்சிறகரல் ஆற்றும், புறவு எனவும் உரைத்தனரே.

கல்மிசை வேய்வாடக் கனை கதிர் தெறுதலான்

துன்னரூஉம் தகையவே காடு என்றார், அக்காட்டுள்

இன்நிழல் இன்மையான் வருந்திய மடப் பிணைக்குத்

தன்நிழலைக் கொடுத்தளிக்கும் கலையெனவும் உரைத்தனரே ....."

- கலித். 11

என்று ஒரு பொருளுடைய தாழிசைகள் மூன்றடுக்கி வந்துள்ளன. இப்பாடலில், களிறு, புறா, மான் முதலியனவற்றின் அன்பினைக் குறிப்பாகச் சுட்டி மீண்டும் மீண்டும் உணர்த்தப்படுகிறது. காடுகள் வெம்மையின் கொடுமையைக் கொண்டிருக்கின்றன. எனினும் அக்காடுகளில் களிறு, புறா, மான் இவற்றின் அன்புறு காட்சிகள் கண்டு தலைவன் பொருளாசையை விட்டுத் தலைவியை நோக்கி விரைந்து வருவான் என்பதாக விலங்குகள், பறவைகளின் ஒத்த அன்பினை மனிதரிடம் ஏற்றிக்கூறும் இறைச்சி உத்தி இலக்கிய அழகியலுக்குத் துணைநிற்கிறது.

உள்ளுறை, இறைச்சி - அழகியற் கூறுகள்

உள்ளுறை, இறைச்சி ஆகிய இரு இலக்கிய அழகியல் கூறுகளும் அகப்பாடல்களில், நுண்மையாகப் பயன்படுத்தப்பட்டுள்ளன. இவை தலைவன், தலைவி முதலியோரின் கூற்றுக்களில் இடம்பெற்று அக்கூற்றுக்களின் உணர்வுகளைச் சிறப்பிக்க வருவன, திணை அடிப்படையில் கருப்பொருள்களின் வழி அமைவன, அகத்திணை மரபினை உணர்ந்தவர்க்கு மட்டுமே இவை எளிதில் புலனாவன. இவ்வாறு உள்ளுறையும்

இறைச்சியும் தம்முள் பொது அழகியற்கூறுகளைக் கொண்டிருப்பினும், இவையிரண்டும் தம்மளவில் தனிச்சிறப்புக் கூறுகளையும் கொண்டுள்ளன.

- உள்ளுறையானது, உள்ளுறுத்து உரைப்பது, தெய்வம் ஒழிந்த பிற கருப்பொருள்களை நிலைக்களமாகக் கொண்டு அமைவது.
- உள்ளுறை உவமை பாடற்பொருளை உணர இன்றியமையாதது. பாடலில் சிறப்பாகவும் மிகுதியாகவும் இடம்பெறுவது.
- உள்ளுறைப் பொருளை அல்லது உள்ளுறையை உணர்த்த வந்த கவிதை அடிகளை நீக்கிவிட்டால் கவிதையின் பொருள் நிறைவு பெறாது. அதனால் கவிதையின் அழகியல் கூறு வெளிப்படாது.
- அகத்திணை மாந்தர் கூற்றைச் சிறப்பிக்க வரும் உள்ளுறை, கருப்பொருள் அடிப்படையில் ஒன்றைக் கூறி அதனால் பெறப்படும் பொருளை உய்த்துணர வைப்பது.
- உள்ளுறை தலைவனது குற்றங்குறைகளைச் சுட்டித் திருத்தும் நோக்குடன் ஆளப்படுவது.
- இவ்வாறு உள்ளுறைக்கான சிறப்புக்கூறுகள் தொல்காப்பிய இலக்கணத்தில் வகுக்கப்பட்டுள்ளன.

இதே போன்று இறைச்சியின் சிறப்புக்கூறுகள் வருமாறு :

- இது பொருளின் புறத்தே தோன்றுவது. கருப்பொருள்களின் செயற்பாட்டை - இயக்கத்தைக் குறிப்பது.
- இறைச்சி, கருப்பொருள்களுள்ளும் ஓரறிவுயிர்கள் முதல் ஐயறிவுடையன வரையுள்ள பறவை, விலங்குகளின் வாழ்க்கை நிகழ்ச்சிகளை - அன்புணர்வுகளைப் பற்றியது.
- இறைச்சி, பொருள் விளக்கத்திற்குத் துணையாவது. இறைச்சிப் பொருள் இல்லையென்றால் கவிதைப்பொருள் குன்றாது என்பது அறியத்தக்கது.
- இறைச்சி என்பது மாந்தர்தம் காதல் உணர்வுக்கு இயைபுப் பின்னணியாக அல்லது எதிர்ப்பின்னணியாக அமைந்து அவ்வுணர்வைத் தூண்டுவது.
- இறைச்சி அன்புணர்ச்சி தூண்டுதலுக்கும் பொதுவாக அன்பு வாழ்க்கைக்கும் பயன்படுமாறு கருப்பொருள் உயிரினச் செயல் பாடுகளைச் சுட்டுவது.

இவ்வாறு இவையிரண்டும் இலக்கிய அழகுணர்வை மிகுவிக்கத் துணை நிற்கின்றன என அறியமுடிகிறது.

முடிவுரை

சங்க இலக்கியங்களில் அகம், புறம் என்னும் இரண்டு வடிவஞ்சார்ந்த இலக்கிய அழகியல் அமைந்துள்ளன. இவற்றுள் உள்ளுறையும் இறைச்சியும் இலக்கியத்திற்கு அகவடிவ அழகினை தருகின்றன. தொல்காப்பியம் உள்ளுறையை ‘அந்தமிழ் சிறப்பில் ஆகிய இன்பம்’ என்று அழகியலின் எல்லையைக் காட்டுகிறது. மேலும் ‘தவலரும் சிறப்பு’, ‘முன்ன மரபு’ என்றெல்லாம் உள்ளுறையைச் சிறப்பிக்கிறது.

இலக்கியத்தின் அக அழகை மிகுவிக்கும் இத்தகு உள்ளுறைகள் சங்க அகப்பாடல்களில் ஏற்புற அமைந்து இன்பம் பயக்கின்றன. சங்க அகப்பாடல்களில் உள்ளுறையைக் காட்டிலும் ஆழங்காற்பட்டு அமைந்திருக்கும் 'இறைச்சி' அடுக்குப்பொருள் பல தந்து இலக்கியத்தின் உள்ளார்ந்த அழகியல் இன்பத்தைப் பன்மடங்கு மிகுவிக்கிறது என்பதை இக்கட்டுரையின் வழி அறியமுடிகிறது.

அடிக்குறிப்புகள் :

1. வ.சுப.மாணிக்கம்,தமிழ்க்காதல், ப.6, சாரதா பதிப்பகம்,சென்னை -2007.

2. ம.ரா.போ.குருசாமி, இலக்கியச் சிந்தனைகள், ப.16 , பழனியப்பா பிரதர்ஸ், சென்னை-2004.

3 ஆ.வேலுப்பிள்ளை,தமிழ் இலக்கியத்தில் காலமும் கருத்தும், ப.9 , பாரி புத்தகப்பண்ணை, சென்னை- 1990.

4. கதிர் மகாதேவன் , ஒப்பிலக்கிய நோக்கில் சங்ககாலம், ப.9, இலட்சுமி வெளியீடு, மதுரை-1977.

5. மு.வரதராசன் , பழந்தமிழ் இலக்கியத்தில் இயற்கை , ப.12, பாரி நிலையம், சென்னை-2006.

6. தனிநாயக அடிகள், சங்க இலக்கியத்தின் சிறப்பியல்புகள், ப.44,பழனியப்பா பிரதர்ஸ், சென்னை-2003.

7. வ.சுப.மாணிக்கம்,தமிழ்க்காதல், ப.4, சாரதா பதிப்பகம்,சென்னை -2007.

8. இளம்.(உரை.), தொல். பொருள். பொருளி. நூ.46, கழக வெளியீடு, சென்னை- 1983.

9. தமிழண்ணல், சங்க இலக்கிய ஒப்பீடு – இலக்கியக் கொள்கைகள், பக்.68 -77,மீனாட்சி புத்தக நிலையம், மதுரை-2003.

10. ச.சாம்பசிவனார், காப்பிய வழியில்!, ப.118, வளவன் வெளியீடு, மதுரை-1992.

11. மா. சுசிலா, கம்பராமாயணத்தில் சங்க இலக்கிய மரபுகள், ப.143, பொன்னி வெளியீடு, மதுரை-1993.

12. ந.சுப்புரெட்டியார் , அகத்திணைக் கொள்கைகள், ப.483, பாரிநிலையம், சென்னை-1981.

13. தமிழண்ணல், சங்க இலக்கிய ஒப்பீடு, ப.76, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை-2003.

14. கதிர் மகாதேவன் , ஒப்பிலக்கிய நோக்கில் சங்ககாலம், ப.18, இலட்சுமி வெளியீடு, மதுரை-1977.

15. ந.சுப்புரெட்டியார் , தொல்காப்பியம் காட்டும் வாழ்க்கை, ப.225, பழனியப்பா பிரதர்ஸ், சென்னை-1986 .

16. தமிழண்ணல், சங்க இலக்கிய ஒப்பீடு, ப.78, மீனாட்சி புத்தக நிலையம், மதுரை-2003.

பார்வை நூல்கள் :

References

இளம்பூரணர் (உரை.), தொல்காப்பியம் – பொருளதிகாரம், கழக வெளியீடு, சென்னை. 1983.

பொ.வே. சோமசுந்தரனார், பத்துப்பாட்டு(உரை.), கழக வெளியீடு, சென்னை.2008.

எட்டுத்தொகை, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பதிப்பு,சென்னை-2011.